2014 ஜூலை 23]

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்) நான் Agenda—வின் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். நீங்கள் திடீரென்று பிரச்சினை எழுப்பினால் எப்படி? (குறுக்கீடுகள்) நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சந்திரகுமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Agenda—வின் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். நாளைக்குப் பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், நான் Agenda—வின் அடுத்த அலுவலுக்குப் போய் நிறைய நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) இப்போது Zero hour இல்லை. அது முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் இப்பொழுது raise பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. நாளைக்கு raise பண்ணலாம், உட்காருங்கள். திரு. பாலகிருஷ்ணன் நாளைக்குக்கூட raise பண்ணலாம், உட்காருங்கள். இதில் ஒரு முன்மாதிரியாக நீங்கள் இருக்க வேண்டாம். நான் ஏற்கெனவே Agenda—வின் அடுத்த அலுவலுக்குப் போய் நிறைய நேரம் ஆகிவிட்டது. இரண்டாவது item, மூன்றாவது item நான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நாளைக்குப் பேசலாம், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இவ்வளவுதூரம் நான் சொன்னதற்குப் பிறகு நீங்கள் பிடிவாதமாக பேசுவது சரியில்லை. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

இல்லை, இல்லை, சரியில்லை. (குறுக்கீடுகள்) நான் நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன். நீங்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னால் நீங்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் (குறுக்கீடுகள்)

என்ன சந்திரகுமார்? (குறுக்கீடுகள்) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அது எனது ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) பதில் வந்தவுடன் நான் ஒவ்வொன்றாக எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கு ஒன்று எடுத்துள்ளேன். பதில் வர வர ஒவ்வொன்றாக வரிசையாக எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. பதில் வர வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் வித்தியாசம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) பதில் வர வர ஒவ்வொன்றாக எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) தினசரி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். உட்காருங்கள்.

5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கல்விப் புரட்சியையும், தொழில் புரட்சியையும் உருவாக்கி, உலகத்தரம் வாய்ந்த கல்வியால் தமிழகத்தினை அறிவுசார் தலைநகரமாகவும், தொழில் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் பெரிதளவில் ஈர்க்கப்பட்டு பல புதிய தொழில்கள் துவங்கப்பட்டு தமிழகத்தினை புதுமைகள் படைக்கும் மையமாக மாற்றியமைக்கத் திட்டமிட்டு, செயலாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது முதல் நூற்று நாற்பத்தைந்தாவது வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.